# மொறட்டுவைப் பல்கலைக்கழகம், இலங்கை
# பல்கலைக்கழக அனுமதி - கல்வியாண்டு 2025/2026

## மொறட்டுவைப் பல்கலைக்கழகத்தின் பின்வரும் பாடநெறிகளை பின்பற்றுவதற்கான திறனாய்வு தேர்வுக்கான விண்ணப்பம் கோரல்

- **கட்டடக்கலை இளங்கலைமானி, வடிவமைப்பு இளங்கலைமானி, நிலத்தோற்ற கட்டடக்கலை இளங்கலைமானி (கட்டடக்கலைப்பீடம்)**
- **நாகரிக வடிவமைப்பும் உற்பத்தி அபிவிருத்தியும் இளங்கலைமானி (பொறியியல்பீடம்)**

மேற்படி திறனாய்வு தேர்வுக்கான விண்ணப்பங்கள் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் வெளியிடப்பட்டுள்ள "இலங்கையிலுள்ள பல்கலைக்கழகங்களின் பட்டப்பயில் நெறிகளுக்கான அனுமதி கல்வியாண்டு 2025/2026" கையேட்டின் பிரிவு 1.2 இற்கு அமைவாக பல்கலைக்கழக அனுமதிக்கான குறைந்தபட்ச்ச தேவைப்பாடுகளை பூர்த்தி செய்த மாணவர்களிடமிருந்து கோரப்படுகின்றன.

**பல்கலைக்கழக அனுமதிக்காக இணையவழி ஊடாக விண்ணப்பங்களை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குவிற்கு சமர்ப்பித்த விண்ணப்பதாரர்கள், அதற்கு மேலதிகமாக, குறிப்பிடப்பட்டுள்ள திறனாய்வு தேர்வுக்கு தோற்றுவதற்கான விண்ணப்பங்களை சமர்ப்பிப்பதுடன் அவற்றில் தேர்ச்சி பெறுதலும் வேண்டும்.**

விண்ணப்பதாரர்கள், மேற்படி திறனாய்வு தேர்விற்கு தோற்றுவதற்கான தகமையினை பெறுவதற்கு, உரிய பாடநெறிகளின் கீழ் குறிக்கப்பட்ட தேவைப்பாடுகளை பூர்த்தி செய்தல் வேண்டும்.

### (1) கட்டடக்கலை இளங்கலைமானி (கட்டடக்கலைப்பீடம்)

2025 ஆம் ஆண்டுக்கான க.பொ.த (உயர்தரம்) பரீட்சைக்கு தோற்றிய விண்ணப்பதாரர், கீழ்க்கண்ட பாடங்களில் குறைந்தபட்சம் "S" சித்தியை பெற்றிருக்க வேண்டும், **(பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் கையேடு 2025/2026 இன் பிரிவுகள் 1.2 மற்றும் 2.2.8.6 ஐ பார்க்கவும்.)**

(i) பின்வரும் பாடங்களில் குறைந்தது ஒரு பாடத்தையேனும் தெரிவு செய்திருத்தல்;

| | | |
|---|---|---|
| சித்திரம் | புவியியல் | உயிரியல் |
| உயர் கணிதம் | இரசாயனவியல் | பௌதிகவியல் |
| இணைந்த கணிதம் | | |

**மற்றும்;**

**(ii)** பின்வரும் நிரலில் ஏனைய பாடத்தை/ பாடங்களை எடுத்திருத்தல்:

| | | |
|---|---|---|
| கணக்கீடு | ஹந்தி | அரபு |
| இந்து நாகரீகம் | பௌத்த நாகரீகம் | வரலாறு |
| வணிகப் புள்ளிவிபரவியல் | மனைப் பொருளியல் | வணிகக்கல்வி |
| இஸ்லாமிய நாகரீகம் | சீன மொழி | ஜப்பானிஸ் |
| கிரேக்க உரோம நாகரீகம் | அளவையியலும் விஞ்ஞானமும் | பொருளியல் |
| அரசியல் விஞ்ஞானம் | கணிதம் | பாளி |
| ஆங்கிலம் | சமஷ்கிருதம் | பிரெஞ்சு |
| சிங்களம் | ஜேர்மன் | தமிழ் |
| தொடர்பாடல் ஊடகக்கற்கை | கிறிஸ்தவ நாகரீகம் | விவசாய விஞ்ஞானம் |
| தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம் | | கொரிய மொழி |

குறிப்பு:

(i) இல் குறிப்பிடப்பட்டுள்ள பாடங்களிலிருந்து எந்த மூன்று பாடங்களிலும் தேர்ச்சி பெற்றுள்ள விண்ணப்பதாரர்களும், மேலே குறிப்பிடப்பட்டுள்ள திறனாய்வு பரீட்சைக்கு விண்ணப்பிக்கத் தகுதியுடையவர்கள் ஆவர்.

மேலும், விண்ணப்பதாரர்கள் கீழ்க்கண்ட தேவைப்பாடுகளையும் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

- க.பொ.த (சா/த.) பரீட்சையில் ஆங்கிலத்தில் குறைந்தது சாதாரண சித்தி (S)
- க.பொ.த (சா/த.) பரீட்சையில் கணிதத்தில் குறைந்தது திறமை சித்தி (C), அல்லது க.பொ.த (உ/த.) பரீட்சையில் கணிதத்தில் சாதாரண சித்தி (S)

## (2) வடிவமைப்பு இளங்கலைமானி (கட்டடக்கலைப்பீடம்)

2025 ஆம் ஆண்டுக்கான க.பொ.த (உயர்தரம்) பரீட்சைக்கு தோன்றிய விண்ணப்பதாரர், எதாவது மூன்று பாடங்களில் குறைந்தபட்சம் “S” சித்தியை பெற்றிருக்க வேண்டும். **(பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் கையேடு 2025/2026 இன் பிரிவுகள் 1.2 மற்றும் 2.2.8.9 ஐ பார்க்கவும்.)**

மேலும், விண்ணப்பதாரர்கள் கீழ்க்கண்ட தே தேவைப்பாடுகளை பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

- க.பொ.த (சா/த.) பரீட்சையில் ஆங்கிலத்தில் குறைந்தது சாதாரண சித்தி (S)
- க.பொ.த (சா/த.) பரீட்சையில் கணிதத்தில் குறைந்தது திறமை சித்தி (C), அல்லது க.பொ.த (உ/த.) பரீட்சையில் கணிதத்தில் சாதாரண சித்தி (S)
- க.பொ.த (சா/த.) பரீட்சையில் விஞ்ஞானத்தில் குறைந்தது திறமை சித்தி (C)

## (3) நிலத்தோற்ற கட்டிடக்கலை இளங்கலைமானி
## (கட்டடக்கலைப்பீடம்)

2025 ஆம் ஆண்டுக்கான க.பொ.த (உயர்தரம்) பரீட்சைக்கு தோன்றிய விண்ணப்பதாரர், கீழ்க்கண்ட பாடங்களில் குறைந்தபட்சம் "S" சித்தியை பெற்றிருக்க வேண்டும். (பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் கையேடு 2025/2026 இன் பிரிவுகள் 1.2 மற்றும் **2.2.8.8** ஐ பார்க்கவும்.)

**(i)** பின்வரும் பாடங்களில் குறைந்தது ஒரு பாடத்தையேனும் தெரிவு செய்தல்:

| | | |
|---|---|---|
| சித்திரம் | புவியியல் | உயிரியல் |
| உயர் கணிதம் | இரசாயனவியல் | பௌதிகவியல் |
| இணைந்த கணிதம் | விவசாய விஞ்ஞானம் | |

**மற்றும்;**

**(ii)** பின்வரும் நிரலில் ஏனைய பாடத்தை/ பாடங்களை எடுத்திருத்தல்**:**

| | | |
|---|---|---|
| கணக்கீடு | ஹந்தி | அரபு |
| இந்து நாகரீகம் | பௌத்த நாகரீகம் | வரலாறு |
| வணிகப் புள்ளிவிபரவியல் | மனைப் பொருளியல் | வணிகக்கல்வி |
| இஸ்லாமிய நாகரீகம் | சீன மொழி | ஜப்பானிஸ் |
| கிரேக்க உரோம நாகரீகம் | அளவையியலும் விஞ்ஞானமும் | பொருளியல் |
| அரசியல் விஞ்ஞானம் | கணிதம் | பாளி |
| ஆங்கிலம் | சமஷ்கிருதம் | பிரெஞ்சு |
| சிங்களம் | ஜேர்மன் | தமிழ் |
| தொடர்பாடல் ஊடகக்கற்கை | கிறிஸ்தவ நாகரீகம் | கொரிய மொழி |
| தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம் | | |

குறிப்பு:

(i) இல் குறிப்பிடப்பட்டுள்ள பாடங்களில் எதாவது மூன்று பாடங்களில் தேர்ச்சி பெற்றுள்ள விண்ணப்பதாரர்களும், மேலே குறிப்பிடப்பட்டுள்ள திறனாய்வு பரீட்சைக்கு விண்ணப்பிக்கத் தகுதியுடையவர்கள் ஆவர்.

மேலும், விண்ணப்பதாரர்கள் கீழ்க்கண்ட தேவைப்பாடுகளையும் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்

- க.பொ.த (சா/த.) பரீட்சையில் ஆங்கிலத்தில் குறைந்தது சாதாரண சித்தி (S)
- க.பொ.த (சா/த.) பரீட்சையில் கணிதத்தில் குறைந்தது திறமை சித்தி (C), அல்லது க.பொ.த (உ/த.) பரீட்சையில் கணிதத்தில் சாதாரண சித்தி (S)

## (4) நாகரிக வடிவமைப்பும் உற்பத்தி அபிவிருத்தியும்
## (பொறியியல்பீடம்)

2025 ஆம் ஆண்டுக்கான க.பொ.த (உயர்தரம்) பரீட்சைக்கு தோன்றிய விண்ணப்பதாரர், எதாவது மூன்று பாடங்களில் குறைந்தபட்சம் "S" சித்தியை பெற்றிருக்க வேண்டும்.
**(பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் கையேடு 2025/2026 இன் பிரிவுகள் 1.2 மற்றும் 2.2.8.7 ஐ பார்க்கவும்.)**

மேலும், விண்ணப்பதாரர்கள் கீழ்க்கண்ட தேவைகளையும் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்;

- க.பொ.த (சா/த.) பரீட்சையில் ஆங்கிலத்தில் குறைந்தது திறமை சித்தி (C)

- **<u>பரீட்சை நேர அட்டவணை</u>**

| பாடநெறி | பரீட்சை நேரம் | பரீட்சை திகதி |
|---|---|---|
| கட்டடக்கலை இளங்கலைமானி<br>நிலத்தோற்ற கட்டிடக்கலை இளங்கலைமானி<br>(கட்டடக்கலைப்பீடம்) | மு. ப 9.30 - மதியம்12.00 | 06-06-2026 |
| வடிவமைப்பு இளங்கலைமானி<br>(கட்டடக்கலைப்பீடம்) | பி.ப 1.30 - பி.ப 4.00 | |
| நாகரிக வடிவமைப்பும் உற்பத்தி அபிவிருத்தியும்<br>(பொறியியல்பீடம்) | மு. ப 9.30 - மதியம்12.00 | 07-06-2026 |

- **<u>விண்ணப்பங்களை சமர்ப்பித்தல்:</u>**

**விண்ணப்பதாரர்கள், இணையவழி விண்ணப்பங்களை மொறட்டுவைப் பல்கலைக்கழகத்தின் வலைத்தளத்தினுடாக (https://uom.lk/) சமர்ப்பிக்க முடியும்** என்பதுடன் விண்ணப்ப கட்டணம் செலுத்தியதற்குரிய பற்றுச்சீட்டு மற்றும் உரிய கல்விச் சான்றிதழ்களின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதிகள் இணையவழி விண்ணப்பத்துடன் சமர்ப்பிக்கப்படுதலும் வேண்டும்.

க.பொ.த (சாதாரண தரம்) மற்றும் க.பொ.த (உயர்தரம்) சான்றிதழ்களின் பிரதிகள், அதிபர் அல்லது சமாதான நீதிவான் அல்லது அரச துறையின் நிர்வாக தர அதிகாரி ஒருவரால் சான்றளிக்கப்பட்டு விண்ணப்பத்துடன் இணைத்து பதிவேற்றப்பட வேண்டும். சான்றளிக்கும் அதிகாரியின் அதிகாரப்பூர்வ முத்திரை ஒவ்வொரு சான்றளிக்கப்பட்ட பிரதியிலும் பொறிக்கப்பட்டிருத்தல் வேண்டும். அத்துடன் ஒரு விண்ணப்பதாரர் இணையதளத்திலிருந்து பெறப்பட்ட க.பொ.த (உயர்தரம்) சான்றிதழை சமர்ப்பிக்கும் பட்சத்தில், விண்ணப்பதாரரின் பெயர் மற்றும் உயர்தர சுட்டிலக்கம் குறிப்பிடப்பட்டு, அதிபர் அல்லது சமாதான நீதிவான் அல்லது அரச துறையின் நிர்வாக தர அதிகாரி ஒருவரால் சான்றளிக்கப்பட்டிருக்க வேண்டும்.

- **<u>பரீட்சை கட்டணம் :</u>**

இலங்கை வங்கியின் எந்தவொரு கிளையிலும் பெறப்பட்ட, துணைவேந்தர், மொறட்டுவைப் பல்கலைக்கழகம் கணக்கு இலக்கம், 306836 (கட்டுபெத்தை கிளை) இற்கு வரையப்பட்டபணம் செலுத்தப்பட்டதற்கான உரிய சான்றின் பிரதி விண்ணப்பத்துடன் இணைக்கப்படுதல் வேண்டும் என்பதுடன் விண்ணப்பதாரரின்

தேசிய அடையாள அட்டை இலக்கம் மற்றும் "திறனாய்வு தேர்வு" என்பவை தெளிவாக குறிப்பிடப்படலும் வேண்டும். அத்துடன் கட்டணங்கள் https://pay.uom.lk. ஊடாகவும் செலுத்தப்பட முடியும். கட்டணம் செலுத்தும் போது Reference/Pay Advice ID ஒரு பாடநெறிக்கு – APT1500; இரண்டு பாடநெறிகளுக்கு – APT3000; மூன்று பாடநெறிகளுக்கு – APT4500; நான்கு பாடநெறிகளுக்கு – APT6000 என்றவாறு குறிப்பிடப்படுதல் வேண்டும்.

(ATM பணப்பரிவர்த்தனைகள், காசோலைகள், தபால் ஆணைகள் / காசுக்கட்டளைகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.)

**பரீட்சை கட்டணம்:**

ஒரு பாடநெறிக் கான பரீட்சை கட்டணம் ரூ. 1,500/- ஆகும்
மேலும், ஒன்றிற்கு மேற்பட்ட பாடநெறிக்கு விண்ணப்பிக்கும் பட்சத்தில் பரீட்சை கட்டணம் பின்வருமாறு:

• ஒரு பாடநெறி – ரூ. 1,500/-
• இரண்டு பாடநெறிகள் – ரூ. 3,000/-
• மூன்று பாடநெறிகள் – ரூ. 4,500/-
• நான்கு பாடநெறிகள் – ரூ. 6,000/-

- **<u>சிறப்பு குறிப்புகள்</u>:**

(i) விண்ணப்பப் படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பெயர் சான்றிதழ்களில் குறிப்பிடப்பட்டுள்ள பெயருடன் வேறுபட்டிருந்தால், அவை ஒரே நபரைச் சார்ந்தவை என்பதை உறுதிப்படுத்தும் சத்தியப்பிரமாணப் பத்திரத்தின் (Affidavit) பிரதியை விண்ணப்பதாரர் சமர்ப்பிக்க வேண்டும்.

(ii) ஒவ்வொரு திறனாய்வு பரீட்சைக்கும் தேவையான அனுமதி தேவைப்பாடுகளை பூர்த்தி செய்துள்ள தனிப்பட்ட விண்ணப்பதாரருக்கான பரீட்சை அனுமதி அட்டையினை, பதிவிறக்கம் செய்வதற்கான இணைப்பு, விண்ணப்பத்தை சமர்ப்பிக்க பதிவு செய்யும் போது பயன்படுத்திய மின்னஞ்சல் முகவரிக்கு நேரடியாக அனுப்பப்படும். எனவே, பதிவு செய்யும் போது செல்லுபடியாகும் மின்னஞ்சல் முகவரியை பயன்படுத்துமாறு விண்ணப்பதாரர்கள் கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

(iii) எந்தவொரு சந்தர்ப்பத்திலும் நிராகரிக்கப்படட விண்ணப்பதாரரின் கட்டணங்கள் மீளளிக்கப்படமாட்டாது.

(iv) விண்ணப்பங்கள் பின்வரும் காரணங்களுக்காக நிராகரிக்கப்படும்.

(a) பூர்த்தி செய்யப்படாத இணையவழி விண்ணப்பங்கள்.
(b) பல்கலைக்கழக அனுமதிக்கான குறைந்தபட்ச மற்றும் திறனாய்வு தேர்வில் தோற்றுவதற்கான ஏனைய தேவைப்பாடுகளை பூர்த்தி செய்யாத விண்ணப்பங்கள்.

(v) 2025 ஆண்டிற்கான க.பொ,த (உ/த) பரீட்சை பெறுபேறுகள் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கும் அல்லது மீளாய்வுக்கு விண்ணப்பித்திருப்பதின் காரணமாக பல்கலைக்கழக அனுமதிக்கான குறைந்தபட்ச தேவைப்பாடுகளை தற்போது பூர்த்தி செய்யாத விண்ணப்பதாரர், அவை வெளியிடப்படும் சந்தர்ப்பத்தில், மேற்படி பாடநெறிகளுக்கு தகமையுடையவராகின் அவர் திறனாய்வுத்தேர்வில் சித்தி அடைந்திருந்தல் அவசியமாகும். எனவே, அவ்வாறான விண்ணப்பதாரர், 13.05.2026 இற்கு முன்னதாக admissions@uom.lk என்ற மின்னஞ்சல் ஊடாக மொறட்டுவைப் பல்கலைக்கழகத்தினை தொடர்பு கொள்ளுமாறு வேண்டப்படுகின்கிறீர்கள்.

(vi) திறனாய்வு பரீட்சையில் தேர்வில் சித்தியடைவது மட்டும் பாடநெறியில் அனுமதி பெறுவதற்கான ஒரே தகைமையாகாது.

(vii) விண்ணப்பபடிவங்கள் சமர்ப்பிக்கப்பட்ட பின்னர் எந்தவொரு மாற்றங்களும் அனுமதிக்கப்பட மாட்டாது. எனவே, விண்ணப்பதாரர் விண்ணப்பத்தினை இணையவழி ஊடாக சமர்ப்பிற்பதற்கு முன்னர் உரிய விபரங்களை சரி பார்க்கும்படி வேண்டப்படுகின்கிறீர்கள்.

- **<u>பரீட்சைக்கு தகமை பெற்றோர் பட்டியல்</u>**:

பரீட்சைக்கு தகமை பெற்றோர் பட்டியல் பரீட்சை திகதிக்கு இரண்டு தினங்களுக்கு முன்னதாக பல்கலைக்கழகத்தின் வலைத்தளத்தில் வெளியிடப்படும் என்பதுடன், அனுமதி அட்டை தொடர்பான அல்லது வேறேதேனும் விசாரணைகள் இருப்பின் அவை பின்வரும் மின்னஞ்சல் முகவரி ஊடாக அனுப்பப்படுதல் வேண்டும்

மின்னஞ்சல் முகவரி - admissions@uom.lk

- **<u>விண்ணப்ப முடிவுத்தேதி:</u>**

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் இணையவழி ஊடாக உரிய ஆவணங்களின் பிரதிகளுடன் 13.05.2026 அன்று பிற்பகல் 6 மணி அல்லது அதற்கு முன்னதாக சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும் என்பதுடன் விண்ணப்ப முடிவுத் தேதிக்கு பின்னர் சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது என்பதனையும் கவனத்திற்கொள்ளவும்.

பரீட்சைகள் மற்றும் பதிவுகள் பிரிவு
மொறட்டுவைப் பல்கலைக்கழகம்
கட்டுபெத்தை
மொறட்டுவை
09.05.2026